Thirukkadalmallai vaibhavam

SrI M.S.Ananthasayana BhattAchAriyAr,
archaka sthAneekam, Thirukkadalmallai
&
Oppiliappan Koil SrI VaradAccAri SaThakopan
&
SrIrangam SrI V.Madhavakannan

sadagopan.org

Sincere Thanks To:

1. Smt Rajam Krishnaswamy for Tamil text as well as compilation of the source document
2. SrI B.Senthil Kumar for all the images/relevant details relating to Thirukkadanmallai divya kshetram
3. Smt Jayashree Muralidharan for eBook assembly

CONTENTS

Introduction	1
Sthala purANam in Tamil	3
SrI LakshmInrusimha mangala dasakam	14
BhUtaththAzhwAr pAsuram	16
Thirumangai AzhwAr pAsurams	19

sadagopan.org

sadagopan.org

ஸ்ரீ ஸ்தலசயனப் பெருமாள் திருக்கோயில் – திருக்கடல்மல்லை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருக்கடல் மல்லை (மஹாபலிபுரம்) வைபவம்

பூதத்தாழ்வார் திரு அவதாரத ஸ்தலம்

பெருமாள்	: ஸ்ரீஸ்தலசயனப் பெருமாள்

கிழக்கு நோக்கிய சயனம் - தலசயனம்

தாயார்	: ஸ்ரீநிலமங்கை தாயார்
விமானம்	: ககநாக்ருதி
தீர்த்தம்	: கருட நதி
ப்ரத்யக்ஷம்	: புண்டரீக ரிஷி
மங்களாசாசனம்	: பூதத்தாழ்வார்
	இரண்டாந்திருவந்தாதி (பாசுரம் 70)
	திருமங்கையாழ்வார்
	பெரிய திருமொழி 2-5 (பாசுரங்கள் 1-10)
	பெரிய திருமொழி 2-6 (பாசுரங்கள் 1-10)
	பெரிய திருமொழி 3-5 (பாசுரம் 8)
	திருக்குறுந்தாண்டகம் (பாசுரம் 19)
	திருநெடுந்தாண்டகம் (பாசுரம் 9)
	சிறிய திருமடல் (பாசுரம் 73)
	பெரிய திருமடல் (பாசுரம் 120)

sadagopan.org

ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள் (உத்ஸவர்) - திருக்கடல்மல்லை

sadagopan.org

ஸ்தல புராணம்:

மல்லாபுரி க்ஷேத்ர மஹாத்மியம் பரமசிவனால் பார்வதிக்கும், சூத பௌராணிகரால் அகஸ்தியருக்கும் விவரிக்கப்படுகிறது. இந்த திருக்கடல்மல்லை திவ்யதேசத்தில் புண்டரீக மஹரிஷிக்கு காட்சி தர வேண்டி வெறும் தரையில் எழுந்தருளிய எம்பெருமானின் எளிமையை ப்ரஹ்மா நாரதருக்கு "ஹரி சௌலப்ய ப்ரகாஸம்" என்று விவரிக்கிறார்.

புண்டரீக மஹரிஷி என்ற ரிஷி பல திவ்ய தேசங்களுக்குச் சென்று எம்பெருமானை சேவித்து, திருவிடவெந்தை வந்து அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானையும் சேவித்து விட்டு தெற்கு நோக்கி சென்று ஒரு பொற்றாமரைக் குளத்தை வந்தடைந்தார். அந்த தாமரை புஷ்பங்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் இதழ்கள் உடையனவாக இருந்தன. அந்த தாமரை புஷ்பங்களைக் கண்ட மஹரிஷி அப் பொற்றாமரைகளால் எம்பெருமானை வழிபட வேண்டும் என்ற ஆசையினால் அந்த புஷ்பங்களைப் பறிக்க ஆரம்பித்தார். அப்போது "இந்த புஷ்பங்களைக் கொண்டு திருப்பாற் கடலில் பள்ளி கொண்ட க்ஷீரப்திநாதனை வழி படு" என்ற அசரீரி வாக்கு கேட்டது. அதைக் கேட்ட மஹிரிஷி மிக ஆனந்தமடைந்தார். அப்போது அவர் அந்த குளத்தில் ஒரு முதலை அசைவின்றி படுத்திருப்பதைப் பார்த்தார். அவர் கருணா கடாக்ஷம் பெற்ற அந்தமுதலை அதன் சாபம் நீங்கி, சுயஉணர்வு பெற்று எழுந்து தன் சாபம் நீக்கிய ரிஷிக்கு நன்றி தெரிவித்தது. முனிவர் முதலையின் சாபத்திற்கு காரணம் கேட்க அந்த முதலை தன் கதையை சொல்லலாயிற்று. அந்த முதலை ஒரு காலத்தில் கடல்மல்லைக்கு அரசனாக இருந்தது. அவ்வரசன் பெயர் ஹரிப்ரிய மஹாராஜா. இவர் சிறந்த விஷ்ணுபக்தனாக செங்கோல் செலுத்தி வந்தார். தினமும் நிறைய அன்னதானம் செய்து வந்தார். ஆனால் ஒரு நாள் ஒரு பக்தனுக்கு உணவு கொடுக்கையில் கொஞ்சம் அசிரத்தையாக இருக்க, அந்த பக்தன் அவரை முதலையாகப் போகுமாறு சபித்தார். இன்று புண்டரீக மஹரிஷியின் அருளினால் சாபம் நீக்கப் பெற்ற ஹரிப்ரிய மஹாராஜா தன் மகன் இன்றும் மாமல்லபுரத்தை அரசாள்வதாகவும், அவரும் ஒரு சிறந்த விஷ்ணு பக்தர் எனவும், அவர் எம்பெருமானை ஸ்ரீவராஹராக வழிபட்டு வருவதாகவும் கூறினார்.

தாமரைக் குளம்

sadagopan.org

உடனே மஹரிஷி அந்த ஸ்ரீவராஹ எம்பெருமான் எழுந்தருளியிக்கும் கோவில் பற்றியும் அந்த எம்பெருமான் பற்றியும் கூறும் படி கேட்க ஹரிப்ரிய மஹாராஜா திருக்கடன்மல்லையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவராகப் பெருமாள் பற்றி கூறலானார்.

ஞானப்பிரான் (ஸ்ரீஆதிவராஹர்) கோவில்:

ஹரிப்ரிய மஹாராஜாவின் மூதாதையர்களில் ஒருவரான ஹரிசேகர மஹாராஜா திருவிடவெந்தையில் எழுந்தருளியிருக்கும் நித்ய கல்யாண ஸ்ரீஆதி வராஹ பெருமாளிடம் மிகுந்த பக்தி கொண்டவர். தினமும் மாமல்லையிலிருந்து திருவிடவெந்தை சென்று பெருமாளை வழிபட்டு திரும்பி வந்து 4000 பக்தர்களுக்கு அன்னதானம் செய்த பின்பு தான் உணவு கொள்வார். இதை வராஹ விரதமாக மிக்க சிரத்தையுடன் செய்து வந்தார். இவருடைய பக்தி கண்டு மகிழ்ந்த எம்பெருமான் ஒருநாள் கிழவனாக வேடம் தரித்து, ஒரு சிறுபெண்ணுடன் (பூமிப்பிராட்டியுடன்) மாமல்லைக்கு வந்து வழக்கம் போல் திருவிடந்தைக்குக் புறப்பட்டுக் கொண்டிருந்த அரசரிடம் உணவு வேண்டுமெனக் கேட்டார். அரசன் வழக்கம் போல் திருவிடவெந்தை சென்று எம்பெருமானை சேவித்து விட்டு வந்து தான் உமது பசி தீர்க்க முடியும் என்று சொல்ல, அதுவரை பசி பொறுக்கலாகாது. என் பசிப்பிணி தீர்த்துப்போ என்று (கிழவன் ரூபத்தில் வந்த) பெருமாள் சொன்னார். அவரது நிலை கண்டு இரங்கிய அரசன் தன் உள்ளத்தில் குடிகொண்ட எம்பெருமானை ஆராதித்து, அந்த கிழவரையே திருவிடவெந்தை பெருமாளாகவும், அந்த சிறு பெண்ணை பூமிப் பிராட்டியாகவும் நினைத்து அவர்களுக்கு உணவு எடுத்து வரும் வேளையில் அந்த முதியவர் ஆதிவராஹனாக வலது பக்கத்தில் பூமிப் பிராட்டியுடன் அரசனுக்குக் காட்சி தந்த எம்பெருமான், இனிமேல் ஹரிசேகர மஹாராஜா தினமும் திருவிடந்தை போக வேண்டிய அவசியமில்லை என்றும், இங்கேயே எம்பெருமானை தரிசிக்கலாமென்றும் சாதித்தார். மேலும் தான் (எம்பெருமான்) இங்கேயே எழுந்தருளியிருந்து அனைவரையும் ரக்ஷிப்பதாகவும் சாதித்தார். இவ்விடத்தில் ஹரிசேகர மஹாராஜாவினால் ஞானப்பிரானுக்கு ஒரு திருக்கோவில் எழுப்பப்பட்டது.

ஏனத்தின் உருவாகி

நிலமங்கை யெழில் கொண்டான்

வானத்தி லவர் முறையால்

மகிழ்ந்தேத்தி வலங்கொள்ளக்

கானத்தின் கடல் மல்லைத்

தலசயனத் துறைகின்ற

ஞானத்தின் ஒளியுருவை

நினைவார் என் னாயகரே

இத்திருத்தலத்தில் ஸ்தல சயன பெருமாள் கோவில் வருவதற்கு சுமார் ஒரு யுகத்திற்கு முன்பே இங்கு இந்த ஸ்ரீஆதிவராஹர் கோவில் இருந்தது.

sadagopan.org

ஸ்ரீ ஆதிவராஹ பெருமாள் நாச்சிமார்களுடன் - திருவலவேந்தை

sadagopan.org

ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள் - கருட வாஹனம்
மாசி தீர்த்தவாரி உத்ஸவம்

ஸ்தல சயனம்:

இந்த ஸ்ரீஆதிவராஹப் பெருமாள் கோவில் வரலாறு கேட்டு மனமகிழ்ந்த மஹரிஷி, தான் பறித்த பூக்களோடு க்ஷீராப்திநாதனை தேடி கிழக்கு நோக்கி தன் பிரயாணத்தை தொடர சமுத்திரம் வழியை அடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ஜலத்தை கைகளால் இறைத்து சமுத்திரத்தை கடந்து விடலாமென்று நினைத்து சமுத்திர ஜலத்தை இறைக்க ஆரம்பித்தார். இவரது பக்தியை கண்டு மெச்சிய எம்பெருமான் இவருக்கு காட்சி கொடுக்க எண்ணி ஒரு முதியவர் வேடம் கொண்டு முனிவரிடம் வந்து அருந்துவதற்கு ஆகாரம் வேண்டும் என்று கேட்டார். மஹரிஷி ஆகாரம் கொண்டு வரும் வரையில் தான் கடல் நீரை இறைப்பதாகக் கூறி கடல் நீரை இறைக்க ஆரம்பித்தார். எம்பெருமான் தன் திருக்கரங்களால் கடல் நீரைத் தொட்டு இறைத்ததால் இத்தலம் அர்த்த சேது என்ற புண்ணிய தீர்த்த தலமாயிற்று.

தீர்த்தவாரி!

மஹரிஷி தாம் கொண்டு வந்த மலர்க்குடலையை அந்த முதியவரிடம் கொடுத்து இதை வைத்துக்கொண்டிரும், யாம் சென்று ஆகாரம் கொண்டு வருகிறோம் என்று கூறிச் சென்றார். உணவுடன் திரும்பிய முனிவர் வியக்கும் வகையில் சுமார் 10 மைல் தூரத்திற்கு கடல் நீர் வற்றியிருந்தது. எம்பெருமான் புண்டரீக மஹரிஷி கொடுத்துச் சென்ற பூக்களைச் சூடிக்கொண்டு சங்கு சக்கரமில்லாமல் கடற்கரையில் மண்ணின் மீது நான்கு புஜங்களுடன் (இரண்டு திருக்கரங்களால் தன் திருவடியை மஹரிஷிக்குக் காட்டுவது போலவும், ஒரு திருக்கையால் தன் திருமுடியைத் தாங்கியும்,

sadagopan.org

மற்றொரு திருக்கரத்தால் மஹரிஷியை அழைப்பது போலவும்) கிழக்கு நோக்கிய சயன திருக்கோலத்தில் சேவை சாதிக்க இதைக் கண்டு பேரானந்தமுற்ற ரிஷி எம்பெருமான் திருவடியில் என்றும் அமர்ந்திருக்கும் பாக்கியம் தமக்கு வேண்டுமென்று ப்ரார்த்திக்க எம்பெருமனும் அவ்வாறே அருளினார். இவ்விதம் அந்த தலத்திலேயே சயன கோலத்தில் எம்பெருமான் காட்சி அருளியமையால் ஸ்தலசயனப் பெருமாள் என்னும் திருநாமம் உண்டாயிற்று. இன்றும் தரையில் எம்பெருமான் சயனித்திருக்க புண்டரீக மஹரிஷி கை கூப்பிய வண்ணம் அருகில் உள்ளார். எம்பெருமான் எட்டு வித சயன திருக்கோலங்களில் 27 திவ்ய தேசங்களில் சேவை சாதிக்கிறார். இந்த 27 சயன திருக்கோல திவ்ய தேசங்களில் இரண்டு திவ்ய தேசங்கள் தவிர மற்ற திவ்ய தேசங்களில் ஆதிசேஷன் மீது திருப் பள்ளி கொண்டிருக்கிறார். இந்த திவ்ய தேசத்தில் வெறும் தரையின் மீதும், திருப்புல்லாணியில் திருப்புல்லில்லும் (தர்ப்பையில்) சயனித்திருக்கிறார். இங்கு உற்சவரின் திருநாமம் உலகுய்ய நின்றான் என்பதாகும். இவர் தம் திருக்கரத்தில் ஒரு தாமரை மொக்குடன் திகழ்கிறார். இந்த ஒரே ஒரு திவ்ய தேசத்தில் தான் உற்சவ எம்பெருமான் தாமரை மொக்கு ஒன்றை கையில் ஏந்தியவராகக் காட்சியளிக்கிறார்.

"அர்த ஸேது ஸ்நாநம்!"

இங்கு மாசி மாதம் பௌர்ணமியில் மாசி பௌர்ணமி தீர்த்தவாரி உற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. இந்த சமுத்திரத்தில் நீராடுவது 64 வருடங்களுக்கு ஒருமுறை வரும் (நிகழும்)

sadagopan.org

அர்த்தோதயம், மஹோதயம் என்ற இரண்டு புண்யகாலங்களுக்கு நிகரானது. ஆழ்வார் மங்களாசாசன காலத்தில் ஸ்ரீ ஸ்தலசயன பெருமாளை கடற்கரையில் இருந்த திருக்கோவிலில் வழிபட்டு வந்தனர். 14ம் நூற்றாண்டில் விஜய நகர சாம்ராஜ்ய மன்னர்களில் ஒருவரான பராங்குச மஹாராஜா இயற்கையின் சீற்றங்களுக்கு அஞ்சி, நகருக்குள் ஒரு திருக்கோவில் எழுப்பி, வைகானச ஆகம படி எம்பெருமானையும் ஆழ்வாரையும் பிரதிஷ்டை பண்ணி, பிள்ளை லோகம் ஜீயர் முன்னிலையில் மஹாஸம்ப்ரோக்ஷணம் (கும்பாபிஷேகம்) செய்யப் பெற்றது. இன்று வரை இத்திருத்தலத்தில் ஸ்தலத்தார், ஸ்தானத்தார் கைங்கர்யமாக திருவாராதனம், நித்ய உத்ஸவம், ப்ரஹ்மோத்ஸவம் முதலான உத்ஸவங்கள் வெகு விமரிசையாக நடந்து வருகிறது. தற்போது இக்கோவில் இந்து சமய அறநிலய துறையின் ஆதிக்கத்தில் உள்ளது.

தொன்மை வாய்ந்த ஸ்தலம்:

சங்க காலத் தொகை நூலான பத்துப்பாட்டில் தொண்டைமான் இளந்திரையன் மீது உருத்திரங்கண்ணனார் என்பவர் பாடிய பாடலில் இந்த மாமல்லபுரம் குறிக்கப்படுகிறது.

"வண்டல் ஆயமொடு உள்துறை தலைஇப்

புனல் ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை

இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எரிந்தென

புள்ஆர் பெண்ணை புலம்பு மடற் செல்லாது

கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த

வேள்வித் தூணத்து அசைஇ யவனர்

ஓதும விளக்கின் உயர்மிசைக் கொண்ட

வைகுறு மீனின் பயத் தோன்றும்

நீர்ப்பெயற்று எல்லைப் போகி"

நீர்ப்பாயற்று – நீர்ப்பாயலை உடையது.

நீர்ப்பாயல்-சலசயனம் என்னும் கோயிலேயாகுமென ஆராய்ச்சியாளர்கள் குறித்துச் சென்றுள்ளனர்.

சங்க காலத்திலேயே சலசயனம் என்னும் சொல் அக்கால தமிழ் சொல்லான நீர்ப்பாயலைக் குறிக்கும் என்று குறிப்படுவதிலிருந்து இத் தலத்தின் தொன்மை விளங்கும்.

சிறந்த வாணிகத்தலம்:

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இது மிகச் சிறந்த கடற்கரை நகரமாகவும், பெரிய துறைமுகமாகவும், பன்னாட்டு வாணிகர்களும் வந்து குழுமி பண்டமாற்று செய்து கொள்ளும்

sadagopan.org

மிகப்பெரிய வாணிகத்தலமாகவும் விளங்கியது. கி.பி. முதல் நூற்றாண்டில் பெரிப்பளசு தம் நூலில்

இவ்வூரினையும், பாண்டிச்சேரியையும் பற்றி குறிக்கிறார். இங்கு கிரேக்கர்கள், ரோமானியயர்கள், கோணகர்களின் வாணிகக் கப்பல்கள் நிதிக் குவியலோடு வந்து நம் நாட்டு பொருள்களையும், யானைகளையும் ஏற்றிச் சென்றனர். எண்ணற்ற கப்பல்கள் வந்து போய்க் கொண்டிருந்தது கண்கொள்ளா ஓவியக் காட்சியாக இருந்தது. இங்கு வணிக வளர்ச்சி சிறந்தோங்கிய நிலமையை திருமங்கையாழ்வார் தம் பாடலில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

புலங்கொள் நிதிக்குவையோடு

புழைக் கைம்மா களிற்றினமும்

நலங்கொள் நவமணிக் குவையும்

சுமந்து எங்கும் நான்று ஒசிந்து

கலங்கள் இயங்கும் மல்லைக்

கடல் மல்லைத் தல சயனம்

வலங்கொள் மனத்தார் அவரை

வலங்கொள் என் மட நெஞ்சே

பூதத்தாழ்வாரை உணர்த்தும் திருப்பாவை பாசுரம் – "கற்றுக்கறவை கணங்கள்"

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் "நித்யானுஸந்தானவுரை" யில் கீழ்க்கண்டவாறு சாதிக்கிறார்:

திருப்பாவையில் பதினொன்றாவது பாசுரமான **"கற்றுக்கறவை பல கறந்து"** என்ற பாசுரம் பூதத்தாழ்வாரை யுணர்த்தும் பாசுரம்.

"குற்றமொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே" என்ற விளி பூதத்தார்க்கு நன்கு பொருந்தும். பல பொருள்களை உடையதான **கோ** என்னும் சொல் **கோதா** என்றவிடத்திற்போல் ஸ்ரீஸூக்தியை சொல்லுகிறது இங்கு. **கோவலர் –** ஸ்ரீஸூக்திகளை அருளவல்ல ஆழ்வார்களான முதலாழ்வார்கள்.

"குற்றமொன்றில்லாத" என்ற விசேடணம் முதலாழ்வர்கள் மூவருக்கே பொருந்தும். யோநிஜத்வமாகிற ஒரு குற்றம் மற்றையாழ்வார்களுக்கு உண்டு. அக்குற்றமொன்றும் இல்லாத கோவலர் முதலாழ்வார்கள். அவர்களுள்

பொற்கொடியே ! – "கோல்தேடியோடும் கொழுந்தே போன்றதே மால்தேடி யோடும் மனம்" என்கிற பாசுரத்தினால் தம்மை ஒரு கொடியாகச் சொல்லிக் கொண்டவர் பூதத்தாழ்வாரேயாவர். எம்பெருமானாகிற உபக்நத்தைத் தேடிச் செல்லுகின்ற கொடிபோல்வேன் நான் என்றவர் இவரே.

sadagopan.org

பூதத்தாழ்வார் - திருக்கடல்மல்லை

sadagopan.org

"**கற்றுக் கறவை கணங்கள் பல கறந்து**" என்கிறது முதலாழ்வார்கள் மூவர்க்கும் பொதுவான வாசகம். **கற்றுக் கறவை** – கன்றாகிய கறவை (கறவை என்பதனால் ஸ்ரீஸூக்தி விவக்ஷிதம்). மற்றை ஆழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களை அளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்கனமேயன்றி வெண்பாவாகிய மிகச் சிறிய பாசுரங்களை அளித்தார்கள். பொய்கையாழ்வார் அருளிய திருவந்தாதி கறவைக் கணம். பூதத்தாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள். பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக்கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசன பஹுவசனங்கள் இனங்கின அழகு காண்க.

"**செற்றார் திறலழியச் சென்று செறுச் செய்யும்**" – தேசமெங்கும் திரிந்து பகவத் விரோதிகளை நிரஸிக்க வேணுமென்கிற அர்த்தத்தை " **எண்டிசையும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள் ! தீர்த்தகரராமின் திரிந்து**" என்ற பாசுரத்தினால் வெளியிட்டவர் இவ்வாழ்வாரே.

"**புற்றரவல்குல்** " என்பது இடையழகை வர்ணிப்பதாகும். ஸ்வாபதேசத்தில் இடையழகாவது பக்தியின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில் பக்தியானது இடைப்பட்டதாதலால் இடையழகென்பது பக்தியின் அழகேயாகும்.

இவ்வாழ்வார் தம் திருவந்தாதியை முடிக்குமிடத்து "**என்றளனவன்றால் யானுடைய வன்பு**" என்றே முடித்தார். இதனால் இவருடைய இடையழகு (பக்தி) நன்கு வெளிப்பட்டது. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக்கட்டினார்.

புனமயிலே ! என்ற விளியும் இவருக்கு அழகாகப் பொருந்தும். பொழிலிடத்தே வாழும் மயில். இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல்மல்லை. அதனைப் பாடிய கலியன் "கடி பொழில் சூழ்கடல் மல்லை" என்றே பன்முறையும் பாடினார். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூகலமுடைத்தாதலால், மேகம் நீர் பருக வரும் இடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும். இவ்வாழ்வார் நின்ற இடமும் கடற்கரையிலே யிறே.

சுற்றத்துத் தோழிமாரித்யாதி – இவருக்கு பொய்கையாரும், பேயாரும் சுற்றத்தவர்கள். மற்றையாழ்வார்கள் தோழிமார்.

முகில் வண்ணன் பேர் பாட – முந்துற முன்னம் முகில் வண்ணன் பேர் பாடினவர் இவ்வாழ்வாரே யாவர். "**உலகேழும் முற்றும் விழுங்கும் முகில்வண்ணன் – ஏத்துமென்னெஞ்சு** " என்பது இவர் பாசுரம். புனமயில் முகில் வண்ணனைத்தானே பாடும் !

வைணவ அடியார்களான பல்லவ மன்னர்களின் கைங்கர்யம்:

பல்லவ மன்னர்கள் வைணவர்கள். வைணவம் பரப்பும் வீரர்களாகத் திகழ்ந்தனர். தங்களுக்கு தூய வைணவ பெயர்களையே வைத்துக் கொண்டனர். இங்கு சிம்ம விஷ்ணு என்ற பல்லவ மன்னன் தனது பக்தியின் அடையாளமாக ஆதிவராஹ குகைக் கோயில் அமைத்தான். இங்குள்ள வராஹ மண்டபம், மும்மூர்த்தி மண்டபம் போன்றன சிம்ம விஷ்ணுவால் கட்டப்பட்டதாகும். மேலும் பாண்டவ ரதங்கள்,

sadagopan.org

அர்ஜுனன் தவம், கண்ணபிரானின் கவின்மிகு லீலா விநோதக் காட்சிகள், தசாவதாரக் காட்சிகள், இராமானுஜர் மண்டபம், திரௌபதி தேர், திருமாலின் நின்ற, அமர்ந்த, சயன திருக்கொலங்கள் என்று எங்கு காணினும் விஷ்ணுவின் காட்சிகளும், இலச்சினைகளும் வைணவம் எத்துனை ஆழமாக வேரூன்றி தழைத்துப் பரவியிருந்தது என்பதை நிரூபிக்கின்றது.

ஸ்ரீலக்ஷ்மிந்ருசிம்ஹர் சன்னிதி:

ஸ்ரீரங்கம், திருமலை, காஞ்சீபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி போன்ற திவ்ய தேசங்களில் ஸ்ரீந்ருசிம்ஹருக்கு தனி சன்னிதி உண்டு. அதேபோல் திருக்கடல்மல்லையிலும் வரப்ரசாதி ஸ்ரீந்ருசிம்ஹர் தனி சன்னிதியில் எழுந்தருளி பக்தர்களை ரக்ஷித்து வருகிறர்.

பிள்ளைப் பெருமாளையங்கார் மங்களாசாசனம்:

பிள்ளைப் பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில்,

செறிந்த பனைபறித்துத் திண் களிற்றை சாடி

முறிந்து விழப் பாகனையு மோதி – யெறிந்த

தருக்கடன் மல்லைக் குமைத்தான் தஞ்சமென் நெஞ்சே

திருக்கடன் மல்லைக்குள் திரி

தன்னைத் தாக்க வந்த கம்சனது குவலயா பீடம் என்னும் யானையை பனைமரத்தைப் பிடுங்கி எறிந்து வீழ்த்தினான் கண்ணன். அது மதகளிற்றின் மேல் பட்டு முறிந்து விழுந்து யானைப் பாகனையும் கொன்றது.

அப்பேர்ப்பட்ட தோள் வலிமை கொண்ட கண்ணபிரான் தான் திருக்கடன்மல்லையில் ஸ்தல சயனப் பெருமாளாக சயனித்துள்ளான். அவனைத் தஞ்சமென்று திரி என்று மிக அற்புதமாக மங்களாசாசனம் செய்கிறார்.

sadagopan.org

ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ மங்களம்:

ஸ்ரீலக்ஷ்மிந்ருசிம்ஹ ஆராதகர் உ.வே. முக்கூர் லக்ஷ்மிந்ருசிம்மாசாரியார் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மிந்ருசிம்ஹருக்கு செய்துள்ள மங்களாசாசனம் இது:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருசிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமட்டபல்லிநாதம் ப்ரணதோஸ்மி நித்யம் நம:

ஸ்ரீமட்டபல்லி ந்ருஹரி சரணௌ சரணம் ப்ரபத்யே

மாமல்லபுரவாஸாய மாலோலாய மஹாத்மநே |

மாதவாய ப்ரமோதாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

ஸ்ரீபூத ஸூரிஸேவ்யாய பூதபவ்ய பவாத்மநே |

பூஷணாங்காய பூஜ்யாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

sadagopan.org

ராதா ஹ்ருதய வாஸாய ராதா கான ப்ரியாய ச |

வநமாலிகா வராய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

ஸ்வாமினே க்ருஷ்ணஸ்வாமினே திவ்ய மங்கள ரூபிணே |

தைத்யாந்தகாய தீராய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

உத்துங்க பத்ரீக்ஷேத்ராத் உத்தமஸ்தான வாஸினே |

உத்கீத ஸாமகோஷாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

ரமாலோலாய மாராய ரமணீய ராஸாத்மனே |

ஸ்ரீராமாய ஸ்ரீநாதாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

த்விதீயாந்தாதி பத்யேஷு ஸ்ரீஸௌரிணா கோஷி தம்யத் |

தத்ரூபாய ஸுரூபாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

விக்ரஹாய நிக்ரஹாய ஸுக்ரஹாய க்ரஹாய ச |

க்ருஹே க்ருஹே ஸேவிதாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

ஸாகராய தயாரூப ஸாகராய தராத்மநே |

ஸாகரதீர வாஸாய ஸ்ரீந்ருசிம்ஹாய மங்களம் ||

ஸ்தல சயந லோலய ஸர்வேஷாம் ஸ்தல தாயிநே |

ப்ரஹ்லாத ப்ராண ரூபாய ஸ்ரீந்ருஸிம்ஹாய மங்களம் ||

ஸ்ரீநாராயண யோகீந்த்ர க்ருபா மங்கள ரூபகம் |

முக்கூர் ந்ருஹரிணா ப்ரோக்தம் மங்களார்த்தம் ஸதா படேத் ||

சுபமஸ்து

மங்களம் மஹதே

sadagopan.org

பூதத்தாழ்வார் – இரண்டாந்திருவந்தாதி (பாசுரம் 70)

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்,

தமருள்ளும் தண்பொருப்பு வேலை,-தமருள்ளும்

மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே,

ஏவல்ல எந்தைக் கிடம்

sadagopan.org

In this paasuram, BhUdathAzwAr who was one of the triad of mudal AzwArs, who are extolled for their ayOnija avathArams, praises the many places that are dear to the Lord as His residence.

BhUdathAzhwAr was born at ThirukkaDanmallai, on a 'kurukkaththi' (madhavi or neelotpala) flower bed as an amsam of the Divine mace (called kaumOdaki) of Lord mahAvishNu.

Madhavi (neelotpala) flower

AzhwAr knows that the most sought after place for the Lord to make as His Holy Shrine is in His devotees heart, so AzhwAr lists that as the first place (தமருள்ளம்), then follows with Thanjai mAmaNi kOvil, SrIrangam, Thiruttankal, Thiruvenkatam, the Milky Ocean and the beautiful and lofty ThirukkaDanmallai, Thirukovalur, and the high walled place of ThirukkuDanthai.

AzhwAr elevates the devotees mind as being more lofty and sought-after by Perumal than all other divya desams and thereby establishes the power of bhakti that makes even the lOkanAyakan to become enslaved in the comparatively small place of a devotees heart!

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்

sadagopan.org

ஸ்ரீ நிலமங்கை தாயார்

திருமங்கையாழ்வார் பாசுரங்கள்

sadagopan.org

குமுதவல்லி நாச்சியார் ஸமேத திருமங்கையாழ்வார் - திருநகரி

பெரிய திருமொழி 2-5 (பாசுரங்கள் 1-10)

பாராயது

PAASURAM ~ 1

பாராய துண்டுமிழ்ந்த பவளத்தூணைப்

படுகடலி லமுதத்தைப் பரிவாய்கீண்ட

சீரானை, எம்மானைத் தொண்டர் தங்கள்

சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினை,

போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப்

புணர்மருத மிறநடந்த பொற்குன்றினை,

காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக்

கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே

The Lord- My Emperumaan- who had swallowed the vast universe and brought out later, who is so pleasing to the eyes like the Red Coral, who is like a pillar for us to hold Him firm and tight, who is so sweet like the nectar (amirdham), who reclines so beautifully on the Ocean where pearls and Sapphires are abundant, who is the Strongest one to have torn apart the Kesi asuran, who is my Master, who is like the Sugar cane to His devotees, who broke the tusk of kuvalayaapeetam elephant, who is like the Lion in a battle field, who crawled in front of two marudha trees, who has got the most Beautiful Divine ThirumEni (Body), who removed the sorrow of dark, beautiful GajEndran, who showed Himself (as the Primordial Chief to the world, in the process)- Such Greatest Lord- adiyEn has seen Him at Thirukadalmallai (or Kadanmallai).

sadagopan.org

ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள் - சூர்ய ப்ரபை

PAASURAM 2

பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப்

பொய்ந்நூலை மெய்ந்நூலென் றென்றுமோதி

மாண்டு,அவத்தம் போகாதே வம்மினெந்தை

எனவணங்கப் படுவானை, கணங்களேத்தும்

நீண்டவத்தக் கருமுகிலை எம்மான்றன்னை

நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலை,

காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக்

கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே

Don't waste your time reading all your life and learning all those ramble from others who are lowly selves (and are NOT the devotees of Sriman Narayanan) thinking that those words are the ultimate truths and working as their servants. To get saved, come here. Pay obeisance to my Emperumaan to whom I pay my obeisance. He is worshipped as "the Father" by the likes of me (and other Bhagawathas). He is worshipped and praised by learned ones. He is immeasurable. He is my Swami. He has got the Pearl like ThirumEni and is standing at ThiruninRavoor sthalam. He is the One who destroyed the KaaNdaavanam with fire. adiyEn has seen Him at Thirukkadalmallai.

sadagopan.org

PAASURAM 3

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறாய்

உலகுய்ய நின்றானை, அன்றுபேய்ச்சி

விடம்பருகு வித்தகனைக் கன்றுமேய்த்து

விளையாட வல்லானை வரைமீகானில்,

தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில்

தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்,

கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன்,

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

"கடும்பரிமேல் கற்கி!" - குதிரை வாஹன புறப்பாடு

sadagopan.org

(Here AzhwAr brings Empermaan's Parathvam and His greatness to the attention of ALL THOSE WHO DO NOT KNOW OR REALISE THAT.)

"udamburuvil moonRu onRaay moorthi vERaay ulaguyya ninRaanai…." Sarveshwaran is the One who stands as the antharAthmA of Sivan and Brahma and in order to protect the world He became three (Trinity- VishNu, Sivan and Brahma) by Himself becoming VishNu and executing His will as the antharyaami of BrahmA and Sivan, while He is not bounded by them and their actions. He is the Most wonderful One to have sucked the life of Puthanai rAkshasi by sucking her poisonous breast milk. He is the One who took such a Sowlabhya avthaar of cowherd boy Kutti KaNNan for chasing the cattle and calves. He is SUCH A SOWABHYAN AND SO MERCIFUL to let the calves learn to drink water by His own enactment by entering into the ponds on the way and shows by His hands to drink water. (Ahaaaa… What an imagination! What a description by AzhwAr! Enna sowlabhyam!) He is the One who stands at the temple of Thanjai maNimADa kOil as the Only means for reaching Him. He is the One who (is going to) gallop on the Horse (as Kalki avataar) to save and protect the world. adiyEn has seen such Greatest lord at Thirukkadalmallai.

sadagopan.org

sadagopan.org

" அந்தணர்தம் அமுது!"

PAASURAM 4

பேய்த்தாயை முலையுண்ட பிள்ளைதன்னைப்

பிணைமருப்பில் கருங்களிற்றைப் பிணைமான்நோக்கின்,

ஆய்த்தாயர் தயிர்வெண்ணை யமர்ந்தகோவை

அந்தணர்தம் அமுதத்தைக் குரவைமுன்னே

கோத்தானை, குடமாடுகூத்தன் றன்னைக்

கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக்

காத்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

"pEy thaayai mulai uNda piLLai thannai…" The little infant boy who had expressed desire to suck the demonic Puthanai's breast milk. The mischievous warrior Lord, who had played with the tusks of dark huge elephant. The Lord who lived eating butter and curd from the darting deer eyed YasOdhA. The Lord who is sweetest nectar to Brahmins (His devotees) - "AndhaNartham amudhatthai.." The One who joined with the cowherd women folks; the One danced with the pot; the One who lifted the huge mountain to protect the cattle form their sorrows due to torrential downpour! My Swami- adiyEn has seen Him at Thirukadalmallai.

sadagopan.org

sadagopan.org

"எம்மானைக் கண்டுகொண்டேன் தலசயனத்தே"

PAASURAM 5

பாய்ந்தானைத் திரிசகடம் பாறிவீழப்

பாலகனா யாலிலையில் பள்ளியின்பம்

ஏய்ந்தானை, இலங்கொளிசேர் மணிக்குன்றன்ன

ஈரிரண்டு மால்வரைத்தோ ளெம்மான்றன்னை,

தோய்ந்தானை நிலமகள்தோள் தூதிற்சென்றப்

போய் யறைவாய்ப் புகப்பெய்த மல்லர்மங்கக்

காய்ந்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

The Lord- who had kicked the wheel - sakataasuran and simply destroyed him, with His cute little Red Lotus Feet; the One enjoyed Himself lying down on the little Banyan leaf as small baby; the One who has got the huge large broad four strong shoulders like the mountains of lustrous pearls or emerald stones; the One who is Swami to all; who hugged the Beautiful shoulders of BhUmi piraaTTi; The One made the wrestlers (appointed by duryOdhanan to let KaNNan fall from the illusory seat (poyyasanam)) get finished off when He had gone to duryOdhanan's sabha (court) as a messenger for paaNdavaas. adiyEn has seen such Greatest Lord - my Swami at Thirukkadalmallai. (emmaanaik kaNdu koNdEn thalasayanatthE..")

sadagopan.org

sadagopan.org

"பெருவிசும்பு கடந்தான்!"

PAASURAM 6

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக்

கிளர்பொறிய மறிதிரிய வதனின்பின்னே

படர்ந்தானை, படுமதத்த களிற்றின்கொம்பு

பறித்தானைப் பாரிடத்தை எயிறுகீற

இடந்தானை, வளைமருப்பி னேனமாகி

இருநிலனும் பெருவிசும்பு மெய்தாவண்ணம்

கடந்தானை,எம்மானைக் கண்டு கொண்டேன்

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

The Lord, who is having his Yoga nidrA on AdhisEshan at ThiruppaaRkadal (Milky Ocean); Ramapiraan, who ran behind the lovely deer, that had beautiful golden spots all over its body, which was so fondly sought and asked for by SitA PiraaTTi; KaNNa piraan, who plucked the tusk of strong elephant kuvalayaapeetam; Varaaha mUrthy, who had brought the Mother Earth back on His horn; Thirivikraman whose Feet became just too Big for measuring the whole Universe and the vast Space; He grew so Big as Thirvikraman; aDiyEn has seen such Greatest lord at Thirukkadalmallai.

sadagopan.org

"உள்ளுவாருள்ளத்தே உறைகின்றவன்,!"

sadagopan.org

PAASURAM 7

பேணாத வலியரக்கர் மெலியவென்று

பெருவரைத்தோள் இறநெரித்தன் றவுணர்கோனை,

பூணாகம் பிளவெடுத்த போர்வல்லோனைப்

பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர்தியை,

ஊணாகப் பேய்முலைநஞ் சுண்டான் றன்னை

உள்ளுவா ருள்ளத்தே யுறைகின்றானை,

காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன்

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

The Lord who crushed the asurAs of rAvaNan (who were ignorant of SarvEshwaran's capabilities), with His strong shoulders (by His fighting in the battle); the Great warrior, who tore the chest of hiraNyan; the Garudavaahanan, who reclines on Adhiseshan at the wavy ThiruppARkadal; the One who sucked the poisonous breast milk of rAkshasi Puthanai as if it is the tastiest amudham (nectar); the One who stays in the heart willingly and lovingly of those who are pained at heart to hear such a horrible incident that has happened to our Kutti KaNNan! adiyEn- WHO HAD BEEN SEARCHING FOR SUCH GREATEST EMPERUMAAN - have seen Him at Thirukkadalmallai

sadagopan.org

sadagopan.org

"கண்ணாரக் கண்டுகொண்டேன் " (மோஹினி அலங்காரம்)

PAASURAM 8

பெண்ணாகி யின்னமுதம் வஞ்சித்தானைப்

பிரையெயிற்றன் றடலரியாய்ப் பெருகினானை,

தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யமென்னும்

தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள்மேவி,

எண்ணானை யெண்ணிறந்த புகழினானை

இலங்கொளிசே ரரவிந்தம் போன்றுநீண்ட

கண்ணானை, கண்ணாரக் கண்டுகொண்டேன்

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

(AzhwAr enjoys Bhagawaan's greatness and merciful nature to take even the form of that which does NOT suit His Purushathvam by taking Mohini avathaaram for the sake of His BhakthAs - Devas in this case) PerumAn- the One who took the Mohini avtaar as a lady to deceive the asurAs and prevent them from eating the amudham; Such deceitful Lord- is the One who grew so huge and ferocious as Narasinghan and appeared from the pillar with the shining crescent like white sharp teeth; the One who reclines at Thirumaayyam on the top of AnanthaaAzhwAn; the One who has got infinite unbounded limitless most auspicious attributes (kalyANa guNAs); the One who has long, dark, beautiful, darting, large, ruddy lined red Lotus like lovely eyes; (adadaaaa… adiyEn wish to have been villi daasar to enjoy those eyes of Sri Ranganatha as shown By YathirAjar). adiyen has seen Him to the complete satisfaction of adiyEn's eyes - at Thirukkadalmallai. (kaNNaarak kaNdukoNdEn thalasyanatthE..).

sadagopan.org

sadagopan.org

"பண்டாய வேதங்கள் நான்கினால் அறியப்படுபவன்!" (பரவாஸுதேவ திருக்கோலம்)

PAASURAM 9

தொண்டாயார் தாம்பரவு மடியினானைப்

படிகடந்த தாளாளற் காளயுய்தல்

விண்டானை, தென்னிலங்கை யரக்கர்வேந்தை

விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்களாண்டு,

பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து

வேள்விகளும் வேள்வியோ டங்கமாறும்

கண்டானை, தொண்டனேன் கண்டுகொண்டேன்

கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

This EmperumAn has got the lovely Lotus Feet, most fit to be worshipped, praised and served by His devotees/servants. This Lord is the One who let the body of that strongest- unbeaten great King rAvaNan, (who did not think "Let me be saved by serving The Lotus Feet of Emperumaan who measured the whole Universe in His two steps, as Trivikraman") be eaten by animals and eagles; The Lord- who can be seen and realized by six a~ngas with AchArya upadEsam, by the four permanent Vedas and five yaghams is seen by this lowly self- His servant at Thirukkadalmallai.

sadagopan.org

sadagopan.org

ஸ்ரீநிலமங்கை தாயார் ஸமேத ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள்

Paasuram 10

படநாகத் தணைக்கிடந்தன் றவுணர்கோனைப்

படவெகுண்டு மருதிடைபோய்ப் பழனவேலி,

தடமார்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத்

தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவன் தன்னை,

கடமாரும் கருங்களிறு வல்லான்வெல்போர்க்

கலிகன்றி யொலிசெய்த இன்பப்பாடல்,

திடமாக விவையைந்து மைந்தும்வல்லார்

தீவினையை முதலரிய வல்லார்தாமே

These ten pAsurams of Kaliyan - Thirumangai AzhwAr with rhythm and set to tune, are on: SarvEshwaran- who sleeps on AnanthAzhwAn; who angered at, and caused the death of, asura chief hiraNyan; the little KaNNan, who crawled between the two marudha trees and made them fall down; the Beautiful Lord - Red Lotus Eyed Lord - Rajeeva lOchanan - Aravinda lOchanan - Senthaamarai kaNNan - Lord of Thirukkadalmallai who sleeps on the earth. Those who read these ten pAsurams (and/or these meanings) will have ALL THEIR SORROWS AND KARMIC DISEASES removed down to the roots.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

sadagopan.org

sadagopan.org

ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள்

பெரிய திருமொழி 2-6 (பாசுரங்கள் 1-10)

நண்ணாத

PAASURAM 1

நண்ணாத வாளவுண ரிடைப்புக்கு, வானவரைப்

பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார், மருவினிய

தண்ணார்ந்த கடல்மல்லைத் தலைசயனத் துறைவாரை,

எண்ணாதே யிருப்பாரை யிறைப்பொழுது மெண்ணாமே

"The Lord- who appeared as a Beautiful Mohini avataar, and gloriously distributed the amudham (nectar) to Devas, deceived the asurAs who are with their swords and who don't take refuge at the Lord and never considered the Greatness of Emperumaan, with Her mOhini alankaram- is here reclining at Thirukkadalmallai (Mahabhalipuram)- Thalasayana perumAn. Those who do not think and meditate on this PerumAn, saying "Alas! What a simplicity! How modest is this PerumAn! What a sowlabhyam! How does He sleep on the floor!" and admiring His greatness- we shall NEVER EVER THINK OF THEM".

sadagopan.org

ஸ்ரீதேவி பூதேவி தாயார் ஸமேத ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள்

PAASURAM 2

பார்வண்ண மடமங்கை பனிநன்மா மலர்க்கிழத்தி,

நீர்வண்ணன் மார்வகத்தி லிருக்கையைமுன் நினைந்தவனூர்,

கார்வண்ன முதுமுந்நீர்க் கடல்மல்லைத் தலசயனம்,

ஆரெண்ணும் நெஞ்சுடையா ரவரெம்மை யாள்வாரே

BhUmi PiraaTTi, who has great abhimanam for the Earth (and us living on it), stays to the left of Emperumaan, who has got the blue hued colour of the Ocean; Periya PiraaTTi- MahAlakshmi- the PaTTamahishi- One born of cool, beautiful red Lotus flower stays in the right Chest of Emperumaan; Those who think of Them (Periya PiraaTTi and BhUmi PiraTTi) and consider Their (the PiraaTTis') purushaakaaram, will be awe-struck at Emperumaan's KaaruNyam- sowlabhyam of staying (on the floor) of Thirukkadanmallai, hugged by the ocean- Those devotees are ONLY CAPABLE OF BEING OUR MASTERS TO LET US SERVE THEM".

sadagopan.org

sadagopan.org

"ஞானத்தின் ஒளி உருவு!"

PAASURAM 3

ஏனத்தி னுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்,

வானத்தி லவர்முறையால் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள,

கானத்தின் கடல்மல்லைத் தலசயனத் துறைகின்ற,

ஞானத்தி னொளியுருவை நினைவாரென் நாயகரே

"Once, when the Mother Earth was in trouble, Varaaha PerumAN brought the Earth back from the Ocean's depth and enjoyed the beauty of BhUmi PiraaTTi; Even the celestial bodies - Devas come and praised Him and perform their kaimkaryam at Thirukkadalmallai- He is so blissfully and so gracefully showing Himself there! Devotees- who think of the Divine Body of this Thalasayana PerumAn, which is personification of lustrous jnAnam (Knowledge) and immerse themselves in Him and His ThirumEni- are adiyEn's Masters.

sadagopan.org

கடல்மல்லைத் தலசயனத் துறைவார்!

PAASURAM 4

விண்டாரை வென்றாவி விலங்குண்ண, மெல்லியலார்

கொண்டாடும் மல்லகலம் அழலேற வெஞ்சமத்துக்

கண்டாரை, கடல்மல்லைத் தலசயனத் துறைவாரை,

கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே

rAvaNan- who always won the battles against his enemies and let their dead bodies be eaten by the eagles and wolves,- whose strong broad chest was hugged lovingly by beautiful women- was won over by Emperumaan in the battle filed and his body was let to be engulfed by the pyre- Such greatest and strongest Lord seen in that battle- is reclining and is having His Yoga nidrA at Thirukkadalmallai. Those who worship Him and praise Him keeping Him in the caves of their hearts- BhAgawthas- are the Kula deivams (Lords) for us.

sadagopan.org

sadagopan.org

சிம்ம வாஹனம்

PAASURAM 5

பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்,

விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே,

கச்சிக் கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்,

நச்சித் தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே

"Oh,my dearest mind that is always bent upon doing good only to me! Please pay your obeisance to those Bhagwathas willingly and lovingly in most endearing manner, who worship the Lord of Thiruvehka, who reclines at Thirukkadalmallai and not to the one who was claimed to be the Lord of all arts by those Jains (loitering around with the peacock feathers)"

sadagopan.org

ஸ்ரீ நிலமங்கைத் தாயார் - வலங்கொள் திருக்கடல்மல்லை

PAASURAM 6

புலன்கொள்நிதிக் குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும்

நலங்கொள்நவ மணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து,

கலங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்,

வலங்கொள்மனத் தாரவரை வலங்கொள்ளென் மடநெஞ்சே !

"Oh my obedient mind! Please circumambulate (perform pradhakshiNam) to those Bhagawthas who with a devout mind are themselves circumambulating the Divya Desam of Thirukkadalmallai, where heaps of Gold are found; where lots of strong elephants are seen; where the Navarathna~ngaL (nine gems) are quite common; (such rich, fertile place it is!)

sadagopan.org

திருமஞ்சனம்



PAASURAM 7

பஞ்சிச் சிறுகூழை யுருவாகி, மருவாத

வஞ்சப்பெண் நஞ்சுண்ட அண்ணல்முன் நண்ணாத,

கஞ்சைக் கடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்,

நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே !

"Oh my purest mind! Please pay your obeisance to those Bhaagawathas- who think of Emperumaan of Thirukkadalmallai- Thalasayana PerumAn- and pay their obeisance to Him, who, destroyed the evil minded Kamsan in front of him; who is sweet Lord of all; who, as little darling boy Kutti KaNNan, having the beautiful peacock feather on His lovely dark tresses, - sucked the life along with the poisonous breast milk of the cunning demon lady Puthanai." (The mind is addressed as pure because it is willing to listen obediently to pay its obeisance to Bhaagawathas!)

sadagopan.org

ஸ்ரீ நிலமங்கை தாயாருடன் ஸ்ரீ உலகுய்ய நின்ற பெருமாள், உபய நாச்சிமார்களுடன்

Paasuram 8

செழுநீர் மலர்க்கமலம் திரையுந்து வன்பகட்டால்,

உழுநீர் வயலுழவ ருழப்பின்முன் பிழைத்தெழுந்த,

கழுநீர் கடிகமழும் கடல்மல்லைத் தலசயனம்,

தொழுநீர் மனத்தவரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே !

The farmers whose duty was only to plough and nothing else, and those farmers utilizing the strong oxen plough the fields, and while doing that, the muddy waters and the lotus flowers get shifted hither and thither; such most fertile beautiful land is Thirukkadalmallai. And those devotees who pay their obeisance to the Lord of such most fragrant Thirukadalmallai- oh my purest mind! Please pay your obeisance to them!

sadagopan.org

sadagopan.org

திருச்சக்கரத்து எம்பெருமானார்!

PAASURAM 9

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு,

இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்,விசும்பில்

கணங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்,

வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே !

"Oh my obedient mind! My pure mind! Please pay your obeisance to those BhAgawathas who worship and pay their obeisance to the Lord of Thirukkadalmallai- where the Lord is worshipped even by Devas living in the heaven -Thalasayana PerumAn- who is the Lord having ChakrA in His Hand; my Lord- who, out of His own will, mercifully, has granted a place in His Divine ThirumEni, for Sivan (the One who has the destruction as the duty given to him; who dances in the graveyard where the corpses are burnt).

sadagopan.org

திருக்கடல்மல்லை திவ்ய தம்பதியர்

Paasuram 10

கடிகமழு நெடுமறுகில் கடல்மல்லைத் தலசயனத்து,

அடிகளடி யேநினையு மடியவர்கள் தம்மடியான்,

வடிகொள்நெடு வேல்வலவன் கலிகன்றி யொலிவல்லார்,

முடிகொள்நெடு மன்னவர்தம் முதல்வர்முத லாவாரே

ThirumangaiAzhwAr always think of the devotees who always mediate and think of the Lotus Feet of Emperumaan- Thalasayanatthu Emperumaan- the Lord of Thirukkadalmallai- which is well laid out with the most fragrant roads (fragrance due to the trees with lots of flowers). He has sung these ten pAsurams on these devotees and the reciters will become the king of kings on this world.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

sadagopan.org

புனிதன்! கடல்மல்லைக் கரும்பே!

பெரிய திருமொழி 3-5 (பாசுரம் 8)

சங்கு தங்கு தடங்கடல் கடன்மல்லை

யுள் கிடந்தாய், அருள் புரிந்து

இங்கென்னுள் புகுந்தா யினிப்போயி னாலறையோ,

கொங்கு செண்பக மல்லிகை மலர்புல்கி

இன்னிள வண்டு போய்,இளந்

தெங்கின் தாதளையும் திருவாலி யம்மானே !

Oh Lord of Thiruvaali, where the singing bees hug the SeNbhaga and jasmine flowers for drinking their honey and where the Conches/sea shells are found everywhere! In that big ThiruppaaRkadal, (Milk Ocean) and the Thirukkadanmallai - at these two places You recline and have Your YOganithrA- and now You, out of Your own free will and grace on me, have entered into my heart, will You ever go out? (Sanghu thanghu .... ini pOyinaal aRaiyO?) Here aRaiyO? means that which has been announced to the world using a koTTupaRai. AzhwAr says - "Oh Lord! You have voluntarily entered my heart and have taken residence there and now that has been announced to the whole world (by AzhwAr) so You (the Lord) are now caught in my heart and can never go out." This is the triumph of AzhwAr's bhakthi that has made a prisoner of even the jagatrakshakan and captured Him in AzhwAr's heart forever!

பெரிய திருமொழி 7-1 (பாசுரம் 4)

புள்வாய் பிளந்த புனிதா! என் றழைக்க,

உள்ளேநின் றென்னுள்ளங் குளிரு மொருவா,

கள்வா ! கடன்மல்லைக் கிடந்த கரும்பே,

வள்ளால் ! உன்னை யெங்கனம் நான் மறக்கேனே

sadagopan.org

Oh the Pristinely Purest Lord ! The one who tore open the beak of the bird! (bakAsuran). Like that adiyEn called You and immediately You came in and stood in adiyEn's mind and showered me with your Presence! Oh! the Only One unparalleled Lord! kaLvA – The One whose nature can not be comprehended! The sweetest Reclining Lord of Kadalmallai (MahAbalipuram), delectable like the sweet sugar cane! Your greatest dayA and udhAra guNam (of being in adiyEn's heart even) – How can I ever forget !

திருக்குறுந்தாண்டகம் – பாசுரம் 19

பிண்டியார் மண்டை ஏந்திப்

பிறர்மனை திரிதந் துண்ணும்,

உண்டியான் சாபம் தீர்த்த

ஒருவனூர், உலகமேத்தும்

கண்டியூர் அரங்கம் மெய்யம்

கச்சி பேர் மல்லை என்று

மண்டினார், உய்யல் அல்லால்

மற்றையார்க் குய்ய லாமே ?

The SarvEsvara Tattvam of the Lord is saluted by Thirumangai AzhwAr in this pAsuram. He salutes Hara sApa VimOchana mUrthy of KaNdiyUr Divya dEsam along with the presiding archA mUrthys of other sacred sites such as SriRangam, Thirumeyyam, Kanchi, ThiruppEr and Mallai. From the incomplete Darsana Samanaakaram state (resembling direct seeing) of Bhakthi yOgam the AzhwAr goes on to the actual experience of feasting his eyes on the Subhaasryam (Thirumeni) of the ArchAmUrthys of the different Divya dEsams.

sadagopan.org

திருநெடுந்தாண்டகம் – பாசுரம் 9

வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்

மல்லையாய் ! மதிள்கச்சி யூராய் ! பேராய்,

கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்

குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்,

பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் !

பனிவரையி னுச்சியாய் ! பவள வண்ணா !

எங்குற்றாய் எம்பெருமான் ! உன்னை நாடி

ஏழையேன் இங்கனமே உழிதர் கேனே !

Salutations to the ArchA Murthys of ThirukkaDanmallai, Kanchi, ThiruppErnagar, PavalavaNNan, ThiruppARkaDal and reference to the Lord housing Sankara on His left side of the Body. ParakAla NAyaki asks the Lord: Where are you ? adiyEn is searching for you everywhere.

சிறிய திருமடல் (பாசுரம் 73)

காரார் குடந்தை கடிகை கடன்மல்லை

பெரிய திருமடல் (பாசுரம் 120)

மன்னும் கடன்மல்லை மாயவனை

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

sadagopan.org